ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் துணை

தவத்திரு
பாலகவி சுவாமிகள் அர்ச்சனை

இயற்றியவர்

சு. மங்கையர்க்கரசி.

வெளியிடுவோர்

சு. மங்கையர்க்கரசி, பொருளர்

சற்குருதாசன் டிரஸ்ட்,

11-B, நிமந்தகார ஒற்றைவாடை வீதி.

பெரிய காஞ்சிபுரம் 631 502.

தேதி: 22—8—1990 விலை: 7-00

அருட்சட்ட நெறியின் சிறப்பு இயல்புகள்:

1 விடியல் நான்கு மணிக்குப் பச்சை நீரில் முழுகுதல்.

2 வெந்நீரைப் பயன்படுத்தாமை.

3 இறை வழிபாடு ஆற்றுதல்.

4 ஒருவனே தெய்வம் என்று நம்புதல்.

5 பிற மதங்களை நிந்திக்கா திருத்தல்.

6 மரக்கறி உணவையே கொள்ளுதல்.

7 பஞ்சமா பாதகம் தவிர்த்தல்.

8 மருந்து அருந்தாமல் இறையருள் துணைகொண்டே நோய்களை நீக்கிக் கொள்ளுதல்.

9 ஜோதிடம் மாந்த்ரீகம் நாடாமை.

10 பிரார்த்தனை செய்து கொள்ளாமை.

12 அறமன்றம் அணுகாமை.

11 இறந்தவர்க்கு இரங்காமல், தீக்கிரையாக்காமல் மண்காப்பு செய்தல்.

13 வெள்ளிக்கிழமை விரதம் பேணல்.

14 தினமும் அரைமணி நேரமாவது அருள்நிட்டை புரிதல்.

15 உடல், பொருள், ஆவி அனைத்தையும் இறைவனிடம் ஒப்படைத்து அருள்வாழ்வு ஆற்றுதல்.

16 இறைவன் அருளால் எய்தும் நலங்களை ரகசியமாகப் போற்றிக் காத்தல்.

ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் துணை

தவத்திரு பாலகவி சுவாமிகள் அர்ச்சனை

இயற்றியவர் :

சு. மங்கையர்க்கரசி

பிரமோதூத ஆண்டு மாசித்திங்கள்

உத்திரட்டாதி விண்மீனில்

தவத்திரு

பாலகவி சுவாமிகளின் ஆறுவது குருபூஜை

விழாவில்

வெளியிடுவோர் :

சு. மங்கையர்க்கரசி - பொருளர்

சற்குருதாசன் டிரஸ்ட்


22—8—90 விலை : ரூ. 7-00

கிடைக்குமிடம்:-

சற்குருதாசன் டிரஸ்டு,
11-B, நிமந்தகார ஒற்றைவாடைத் தெரு,
பெரிய காஞ்சிபுரம்.

அச்சிட்டோர்:-

கமலம் பிரஸ்,
காஞ்சிபுரம்.



ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள்

ஓம்

ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் துணை

உள்ளுறை

'அருட்கவிமணி' சாதுராம் சுவாமிகள் இயற்றிய

அருட்கவி வாழ்த்து

(எண்சீரடி யாசிரிய விருத்தம்)

ஆந்திரமும் தீந்தமிழும் ஆய்ந்து கற்ற
அறிஞரினி தாங்கிலமும் அறிந்த அன்பர்
கேந்திரமா இருடியர்பட் டியையே கொண்டு
கெழுதகைசற் குருநாதர் கோயில் கட்டப்
போந்திருந்து பொறுப்புணர்ச்சி யோடுந் தொண்டே
புரிந்துபுரிந் துடலொடுளம் புளகித் தென்றும்
சாந்திபெறும் தவசீலர் சைவ ஞான
தத்துவங்கள் பலவுணர்ந்த தருமசித்தர் 1

பாலகவி **வேங்கடரா** மப்பேர் கொண்ட
பண்பாளர் ஆனத்தூர்ப் பதிமுன் வாழ்ந்தோர்
தாலமுறும் தவத்தாற்சோ டசமும் அஷ்டோத்
தரசதமும் திரிசதியும் ஸஹஸ்ர நாம
மூலமஹார்ச் சனையுமெலாம் தமிழ்ப்பா நூலா
மொழிந்துளரா சிரியப்பா நடையில் அன்னார்
சீலகுரு நாதரெனும் இருடிப் பட்டித்
தெய்வத்தின் மேற்பிறவி 'உய்வைக் காண' 2

அத்தகைய அர்ச்சனைநூல் அன்னார் மீதே
அருந்தமிழில் இது காறும் ஆக்கி னரார்?
முத்தமிழும் ஆரியமும் ஞானப் பாங்கும்
மோனசிவ யோககுரு பக்தி மாண்பும்
மெத்த இடை யிடையேஅன் படியார் பேரும்
விரவிவரு தெய்வமணங் கமழ்பூங் காவாம்
இத்தமிழ்நூல் வாழிஇதை அச்சி ட்டாரோ
டியற்றியவர் பயில்பவரெல் லாரும்வாழி

ஓம்

ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் துணை

தவத்திரு பாலகவி சுவாமிகள்

சகஸ்ரநாம அருச்சனை

முன்னுரை

(''சைவசமய சேவாமணி''
உயர்அருள் திரு. கி பழநியப்பனார் அவர்கள்)

''யானென தென்னும் செருக்கறுக்கத் தெய்வம்
மானிடமாகவே வந்த(து) அதிசயம் ''

— ஆண்டவர்

ஆன்மாக்கள் மூவகைப்படும். ஒவ்வொரு வகையினர்க்கும் ஒவ்வொரு நிலையிலிருந்து ஞானத்தை உணர்த்துவான் இறைவன். அம்மூவகையினர் விஞ்ஞானகலர், பிரளயாகலர் சகலர் எனும் பெயரால் குறிக்கப்பெறுவர். கலை என்பது மாயை; அகலர் என்றால் கலையில்லாதவர் என்பது பொருள். விஞ்ஞானகலர் என்றால் பேரறிவால் கலை நீங்கப் பெற்றவர்; பிரளயாகலர் என்றால் பிரளயத்தில் கலை நீங்கப் பெற்றவர்; சகலர் என்றால் கலையோடு கூடியவர்.

மலங்கள் மூன்று. அவை ஆணவம், கன்மம், மாயை என்பனவாகும். ஆணவம் ஒன்றையே உடையோர் விஞ்ஞானகலர்; ஆணவம், கன்மம் இரண்டுமுடையோர் பிரளயாகலர்; ஆணவம், கன்மம், மாயை மூன்றுமுடையோர் சகலர்.

இம்மூன்று நிலையினர்க்கும் இறைவன் மெய்ஞ்ஞானத்தை அருளும்பொழுது, விஞ்ஞானகலருக்கு அவர்கள் உள்ளத்தில் நின்றும், பிரளாயகலருக்கு அவரவர்கள் முன் வெள்ளை-விடைமேல் மாதொரு பாகனாய்த் தோன்றியும், சகலர்க்கு அவரவர்கள் குருநாதரை அதிட்டித்தும் அருளுவன்.

சரியை, கிரியை, யோகமாகிய தவநெறியின் பயனாகவே, உயிர்க்குயிராய் நிற்கும் பரம்பொருள், குருமூர்த்தமாய் எழுந்தருளி, அவரவர்கள் பக்குவநிலைக்கு ஏற்ப ஞானத்தை உணர்த்துவன். அதனால் குருவைச் சிவனாகப் பாவித்துச் சீடர்கள் வழிபட வேண்டுமென்று சைவ சித்தாந்தம் அறுதியிட்டுக் கூறுகிறது.

இந்நுட்பத்தினை திருமூல நாயனார்,

''குருவே சிவமெனக் கூறினன் நந்தி
குருவே சிவமென் பதுகுறித் தோரார்
குருவே சிவனுமாய்க் கோனுமாய் நிற்கும்
குருவே யுரையுணர் வற்றதோர் கோவே''

(1581)

என மிகத் தெளிவாக அறிவுறுத்துகின்றார்.

எந்த முறையில் இறைவனை வழிபட்டாலும் பயனுண்டு. அவற்றுள் மிக எளிதான ஒரு வழியைத் திருவள்ளுவர் கூறுகின்றார்.

''இருள்சேர் இருவினையுஞ் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு''

இறைவன் புகழை மனமொன்றிக் கூறுவதே சிறந்த வழிபாடாகும்; பாடிப் புகழ்வார் உள்ளத்தில் கண்டு கொண்டேன் இறைவனை என்று அப்பர் பெருமான் அருளு-கின்றார்.

''நாடினார்கம லம்மலரய னோடிரணியன்
ஆகங்கீண்டவன்
நாடிக் காணமாட்டாத் தழலாய நம்பானைப்
பாடுவார்பணி வார்பல்லாண்டிசை கூறுபத்தர்கள்
சித்தத்துள் புக்குத்
தேடிக் கண்டு கொண்டேன் திருவாரூரம்மானே.''

என்று ஆனந்தக் கூத்தாடுகின்றார்.

இறைவன் நாமங்களையும் திருவிளையாடல்களையும் தொகுத்துக் கூறுதலே அருச்சனையாகும். பாட்டே அருச்சனையாகவும். அருச்சனையே பாட்டாகவும் விளங்குமென்பர். அருச்சனையில் 1008 போற்றிகளையுடையது சிறப்புடையதாகும்.

"நாமமோ ராயிரம் ஓதுமின் நாதனை" என்கிறார் திருமூலநாயனார். இதற்கு வொப்பத் தவத்திரு பாலகவி சுவாமிகளின் தலையான சீடராக விளங்கும் அருட்செல்வி மங்கையர்க்கரசி அம்மையார் அவர்கள், தம் குருநாதரின் திருவடிகளுக்கு 1008 போற்றியைத் தொகுத்ததே இந்நூல் வடிவில் வெளிவந்துள்ளது.

குருவருளால் இதில் பல சிறப்புகள் அமைந்துள்ளன. அவற்றுள் சிலவற்றை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

போற்றி முழுவதும் இனிய சொற்றொடர்களால் அகரவரிசையில் அமைக்கப் பெற்றுள்ளன இவற்றையாக்கிய அம்மையாரைப்போன்றே ஓதுவோரும் வாழ்க்கையைத் தூயநெறியில் நடாத்த குருதாதர் அருளை வேண்டும் போற்றிகள் பலவுள்ளன. 'அகந்தையை அடியோடு அகழ்வாய் போற்றி' 'களைகணாய் எம்துயர்களைவாய் போற்றி' போன்ற பலவரிகள் இதற்கு உதாரணமாகும்.

ஆசிரியை அவர்களுக்கு குருநாதர் செய்த உதவியை நன்றியுடன் குறிப்பிடும் பலவரிகள் உள்ளன. உதாரணமாக

'அகதியாம் எம்மை ஆள்வாய் போற்றி'

உற்சாகம் தந்தெமை ஊக்குவை போற்றி,

போன்ற அடிகளைக் கூறலாம்.

இப்போற்றி அருள் மாலையில் முத்துமணிகளை ஊடுருவிச் செல்லும் பொன் சரடாக விளங்குவது பாலகவி சுவாமிகளின் வாழ்க்கை வரலாறும் அருட்செயல்களும், ஆற்றிய அற்புதங்களும், ஆண்டவர் சட்டநெறியை நாடெங்கும் பரப்பச்செய்த சீரிய தொண்டுகளுமே யாகும்.

ஆகவே இப்போற்றிகள் மலர்வழி பாட்டிற்குப் பயன்படுவதுடன், ஓதுவோர் கேட்போர் உள்ளங்களைத் தூய்மையாக்கவும், பாலகவி சுவாமிகளின் தவநெறி வாழ்வை உணர்ந்து கொள்ளவும், இரெட்டியப்பட்டி சுவாமிகளின் சட்டநெறியில் வழுவாது நிற்பதற்கும் பெருந்துணையாக விளங்கும் என்பதில் ஐயமில்லை.

இதனைத் தொகுத்து அளித்த அருட்செல்வி மங்கையர்க்கரசி அம்மையார் அவர்களுக்கு தமிழ் மக்கள் பெரிதும் கடமைப் பெற்றுள்ளனர். அம்மையார் உள்ளங்குளிர இதை ஒவ்வொருவரும் ஓதி எண்ணியவெல்லாம் பெற்று இம்மையிலும் மறுமையிலும் பேரின்ப வாழ்வு பெறுவார்களாக.

பாலகவி சுவாமிகள் திருவடிப்புகழ் ஓங்குக!

''தந்தையும் தாயுமாகித் தானவன் ஞானமூர்த்தி
சிந்தையுள் சிவமதாகும் சீரா நமச்சிவாய''.

இப்படிக்கு
சி பழநியப்பனார்
27—2—90

விசுவநாதபுரம்
மதுரை-14



தவத்திரு. பாலகவி சுவாமிகள்

ஓம்

ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் துணை

தவத்திரு பாலகவி சுவாமிகள்

ஷோடச நாம அர்ச்சனை

தவத்திரு பாலகவி சுவாமிகள்

ஷோடச நாம அர்ச்சனே

ஓம் பாலகவி சுவாமிகள் பாதாரவிந்தயோ:
ஷோடச நாமார்ச்சன பூஜாம் கரிஷ்யே

ஓம் அருளே உருவாய் அமைந்தாய் போற்றி
" ஆனத் துர்அவ தாரா போற்றி
" இன்பமா யெமை யீர்ப்பாய் போற்றி
4 " ஈகையின் வடிவாய் இலங்குவாய் போற்றி
" உயர்பொருள் குருவென உரைப்போய் போற்றி
" ஊக்க மோடுயர்பணி ஆக்குவை போற்றி
" எமையெலாம் காக்கும் இயல்பே போற்றி
8 " ஏகா ந் தத்திற் கீர்ப்போய் போற்றி
" ஐய மகற்று மரசே போற்றி
" ஒருநெறிக் கீர்க்கும் உத்தம போற்றி
" ஓதும் நூல்பல உரைத்தாய் போற்றி
12 " ஔவியம் நீக்கும் பௌவமே போற்றி
" கற்றோர் புகழும் கனியே போற்றி
" சங்கடம் தீர்க்கும் சதுரா போற்றி
" தற்பவம் போக்கும் தந்தையே போற்றி
16 " வள்ளலாய் விளங்கும் வாரியே போற்றி
" நானுவித திவ்ய பரிமள மந்த்ர புஷ்பாணி
ஸமர்ப்பயாமி

பாலகவி சுவாமிகள் ஷோடச நாம அர்ச்சனே முற்றிற்று.

ஓம் ஓம் ஓம்.

ஓம்

ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் துணை

தவத்திரு பாலகவி சுவாமிகள்

அஷ்டோத்ர சதநாம அர்ச்சனை

தவத்திரு பாலகவி சுவாமிகள்

அஷ்டோத்ர சதநாம அர்ச்சனை

ஓம் அகத்திருள் அகற்றும் ஆதவ போற்றி
,, அச்சம் அணுவும் இல்லாய் போற்றி
,, அருளின் ஒளியே அழகே போற்றி
,, அழகனை அணைந்த அரசே போற்றி
,, அன்பின் ஒளியை அளித்தோய் போற்றி
,, அன்பின் வடிவாய் அமைந்தாய் போற்றி
,, அன்னதா னம்பல ஆற்றுவை போற்றி
,, ஆகம நெறியை அருள்வோய் போற்றி
,, ஆக்கமெ லாமெமக் கானாய் போற்றி
,, ஆனத் தூரவ தரித்தாய் போற்றி
,, இருடியர் பட்டியில் வதிவோய் போற்றி
,, இறைபணி இனிதே ஆற்றுவோய் போற்றி
,, இன்பதுன் பங்களைக் கடந்தோய் போற்றி
,, ஈகையிற் சிறந்த எம்மான் போற்றி
,, ஈடிணை யில்லா இயல்பே போற்றி
,, ஈர்த்தணைத் தின்பம் ஈவோய் போற்றி
,, ஈன்றா ளினும்மிக இனியாய் போற்றி
,, உண்மை விளக்கம் உரைப்பாய் போற்றி
,, உத்தமக் குருவை அடைந்தோய் போற்றி
,, உயரிய வாழ்வில் உய்ப்போய் போற்றி
,, உண்மைப் பொருள்தனை உணர்த்துவாய் போற்றி
,, உயிர்க்குயிர் குருவென உரைப்போய் போற்றி
,, உய்தி தந்தருள் ஒருவா போற்றி

ஓம் ஊக்கமே உருவாய் வாழ்ந்தோய் போற்றி
” ஊதிய மாய்எமக் கமைந்தாய் போற்றி
” ஊழியம் செய்துயர் வெய்தினை போற்றி

” எங்கும் நிறைஎம் ஏந்தலே போற்றி
” எத்திக் கும்புகழ் எந்தாய் போற்றி
” எமையெலாம் காக்கும் ஏற்றமே போற்றி
” எவ்வுயிர் பாலும் இரங்குவை போற்றி 30

” ஏகும் வழியை இயம்புவை போற்றி
” ஏகாந் தத்தில் இருப்போய் போற்றி

” ஐம்புல இச்சையை அடக்குவை போற்றி

” ஒப்பில் அருட்கவி பாடுவை போற்றி
” ஒன்றே நெறியென ஓதுவை போற்றி

” ஓங்கா ரத்தை உணர்த்துவை போற்றி
” ஓங்குக நன்றென் றோதுவை போற்றி

” ஔடத மாய்எமக் கானாய் போற்றி
” ஔவிய மில்மனத் தமர்வோய் போற்றி

” கருணை மிகவுடை கண்யா போற்றி 40

” கவலை தீர்நெறி காட்டுவை போற்றி
” கவிமலர் புனையும் கற்பகம் போற்றி
” கற்கண் டினும்மிக இனியாய் போற்றி
” கனிவுறு பாடலில் களிப்போய் போற்றி
” கனிவாய் குருபதம் கலந்தோய் போற்றி

” கிருபை வடிவாய் அமைந்தாய் போற்றி

ஓம் குருநெறி நிற்கும் கோனே போற்றி
” குருபர வணக்கம் அருளினை போற்றி
” குருவருள் நெறியினை விளக்குவை போற்றி
” குன்றென நிமிர்ந்த கொள்கையோய் போற்றி 50

” கோயில் உளமெனக் கூறுவை போற்றி
” கோயில் கொண்ட குழகா போற்றி

” சங்கடம் யாவும் தவிர்ப்பாய் போற்றி
” சட்டநன் நெறியினை விளக்குவை போற்றி
” சதாநிட் டைசெயும் சாமியே போற்றி
” சந்ததம் அடியார் சார்வே போற்றி
” சற்குரு நாமம் சாற்றுவை போற்றி
” சற்குரு பாதம் சார்ந்தோய் போற்றி

” சைவசித் தாந்தச் செம்மலே போற்றி

” சொன்மழை பொழியும் சுந்தர போற்றி 60

” ஞயமும் தெளிவும் அருள்வாய் போற்றி

” தடையிலா தருளும் தற்பரா போற்றி
” தத்துவ நெறியை விளக்குவை போற்றி
” தந்தி முகனருள் பெற்றனை போற்றி
” தரணியில் அருளை வளர்த்தோய் போற்றி
” தவம்செயத் தூண்டும் தயாநிதி போற்றி
” தன்னை மறைத்துவாழ் தகவே போற்றி

” திருத்தொண் டிற்கா ளாக்குவை போற்றி
” திருப்பணி செய்யும் திருவே போற்றி

” தெளிவாய்ப் பொருளருள் தேசே போற்றி 70

ஓம் தொடை பலசாத்தும் தொல்லோய் போற்றி

" தோத்திர மாலை சூட்டுவை போற்றி
" நன்னடை நல்கும் நாயகா போற்றி
" நன்னூல் பலவும் நவின்றோய் போற்றி

" நாதாந்த நாட்டின் நாயகா போற்றி
" நாயகன் அருளை நாடுவை போற்றி

" நித்திய நெறியினை அறிந்தோய் போற்றி
" நினைக்குமுன் வழங்கும் நேர்மையே போற்றி
" நின்மல மோன நிர்க்குண போற்றி

" நீதி நெறிவழி நின்றோய் போற்றி 80

" நூல்பல இயற்றிடு தோன்மை போற்றி

" பக்தி செயும்வழி பகருவை போற்றி
" பக்தி நெறிக்கா ளாக்குவை போற்றி
" படியே றிப்பதம் அடைந்தோய் போற்றி
" பண்புசால் உள்ளம் படருவை போற்றி
" பண்பு மிகப்பெறப் பண்ணுவை போற்றி
" பண்மிகு பாடல் பாடுவை போற்றி
" பழகுதற் கினிய பண்பே போற்றி
" பழமென அடியருக் கானாய் போற்றி

" பாட்டுடைத் தலைவன் ஆனாய் போற்றி 90

" பால கவிப்பெயர்ப் பண்பே போற்றி

" பீடு நிறைகவி புனைவாய் போற்றி

ஓம் புகழை வளர்த்திடு புலவா போற்றி

" பெரிய ரெலாம்விழை பேறே போற்றி

" போகம் குருவருள் என்போய் போற்றி

" மகான்களின் மாட்சி மொழிவோய் போற்றி
" மதிபொழி யமுதுனும் மாண்பினை போற்றி
" மந்திரம் சொல்லும் மாண்பே போற்றி
" மமதை நீக்கிடு மகானே போற்றி
" மயலெலா மகற்றும் மாட்சியே போற்றி 100

" மாட்சிமை மிக்க மணியே போற்றி

" மீளா நெறியை அடைந்தோய் போற்றி

" மேதினி போற்றும் மேலவா போற்றி

" மோகம் நீக்கிடும் முனிவா போற்றி

" வாசியின் விளைவை அறிந்தோய் போற்றி
" வாணியின் அருள்மிகப் பெற்றனை போற்றி

" விநாயகர் அர்ச்சனை மொழிவோய் போற்றி

" வேதப் பொருள்பல விளக்குவை போற்றி 108

பாலகவி சுவாமிகள் அஷ்டோத்தர சதநாம அர்ச்சனை
முற்றிற்று.

ஓம் ஓம் ஓம்

ஓம்

ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் துணை

தவத்திரு பாலகவி சுவாமிகள்

ஸகஸ்ர நாம அர்ச்சனை

ஓம்

ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் துணை

தவத்திரு பாலகவி சுவாமிகள்

ஸகஸ்ரநாம அர்ச்சனை

ஓம் அஃகம் பலவும் தருவோய் போற்றி
" அஃறிணை உயிர்க்கும் அருள்வோய் போற்றி
" அகத்தில் நிறைந்த அன்பே போற்றி
" அகந்தையை அடியோ டகழ்வாய் போற்றி
" அகமே கோயிலாய் அமர்ந்தனை போற்றி
" அகம் நிறை அமுதாய் நிறைந்தனை போற்றி
" அகப் புறத் தூய்மை அளிப்போய் போற்றி
" அகரத்தின் உயர்வை அறிந்தனை போற்றி
" அகதியாம் எம்மை ஆள்வோய் போற்றி
" அகத்தின் மேன்மை அறிந்தோய் போற்றி 10

" அகிலாண் டங்கட் கரசே போற்றி
" அக்காரச் சுவை அளிப்பாய் போற்றி
" அங்கம் ஆலயம் ஆக்கினை போற்றி
" அசர சரங்கள் ஆனாய் போற்றி
" அசத்தென நீக்கா தாள்வோய் போற்றி
" அசடன் எனக்கும் அருள்வோய் போற்றி
" அசல மனம்தரும் அற்புத போற்றி
" அசாத்தியச் செயல்செய ஊக்குவை போற்றி
" அசுர இயல்பை அடக்குவை போற்றி
" அசையா உறுதி உடையோய் போற்றி 20

" அசையா துளத்தில் அமர்ந்தோய் போற்றி
" அச்ச மொன் றறியா அழகா போற்றி

ஓம் அஞ்ஞா னம்நீக் கறமே போற்றி
" அடக்கம் உயர்வென அருள்வோய் போற்றி
" அடக்கம் மிகுந்தொளிர் அறிவே போற்றி
" அடங்கி வாழ்ந்த அமலா போற்றி
" அடாத செயல்களை அகற்றுவை போற்றி
" அடிசிலும் ஆடையும் அளிப்பாய் போற்றி
" அடிபர வடியார்க் கமுதே போற்றி
" அடியர் குழாம்புக அழைப்பாய் போற்றி 30

" அடியர் இலங்களில் அமருவை போற்றி
" அடியரை ஆண்டவன் என்பாய் போற்றி
" அடியருக் காக வாழ்ந்தோய் போற்றி
" அடியருக் கமுதினை ஊட்டுவை போற்றி
" அடியர் பணிசெய ஊக்குவை போற்றி
" அடியருக் கருந்துணை ஆவாய் போற்றி
" அடியரை சன்னிதிக் கழைப்பாய் போற்றி
" அடியர்பால் அகலா அன்போய் போற்றி
" அடியார்க் காறுதல் அளிப்பாய் போற்றி
" அடியார் வாழ்வைத் திருத்துவை போற்றி 40

" அடியார் துன்பம் துடைப்பாய் போற்றி
" அடியார் உளத்தில் ஒளிர்வாய் போற்றி
" அடியார் பெருமை உரைப்பாய் போற்றி
" அடியென் முடியில் அமைப்பாய் போற்றி
" அடியேன் உளத்தில் அமர்வாய் போற்றி
" அடிக்கம லத்தமு தருத்துவை போற்றி
" அடுத்தவ ரைக்காத் தருள்வோய் போற்றி
" அடைக்கலம் அளிக்கும் அன்பே போற்றி
" அணுவின் சூக்குமம் உரைப்போய் போற்றி
" அணுவின் ஆற்றல் அறிந்தோய் போற்றி 50

ஓம் அணுவும் தீமை யிலாதோய் போற்றி
” அணையாய் இருந்தருள் சுரப்போய் போற்றி
” அண்டரும் போற்றும் அரசே போற்றி
” அதர்மம் அனைத்தும் அழிப்பாய் போற்றி
” அதிகா லையில்நீ ராடுவை போற்றி
” அதிசய வாழ்வை ஆற்றினை போற்றி
” அதிசயம் அருள்எனப் பகருவை போற்றி
” அதிசயம் பற்பல காட்டுவை போற்றி
” அதிதே வதைஅருள் ஆனாய் போற்றி
” அதிபதி யாய்எமக் கானாய் போற்றி 60

” அதிருட்டம் அருள்என அருள்வாய் போற்றி
” அத்வித உண்மை அருள்வாய் போற்றி
” அத்துவி தப்பொருள் ஆனாய் போற்றி
” அநந்த கலைகளை அறிந்தோய் போற்றி
” அநந்த கலைப்பொருள் விளக்குவை போற்றி
” அநவர தமும்எமை ஆள்வாய் போற்றி
” அநந்த மாம்பாடல் அருளினை போற்றி
” அநீதி தவிர்த்தருள் அரசே போற்றி
” அநுகுண மாம்செயல் ஆற்றுவை போற்றி
” அநுகூலம் புரிந்து ஆளுவை போற்றி 70

” அநுபவம் பெரிதென்று உரைப்போய் போற்றி
” அநுபவம் பெறமிக உதவுவை போற்றி
” அநுபூ திநிலை அடைந்தோய் போற்றி
” அநேகமாம் கலைகள் அறிந்தோய் போற்றி
” அந்தக னைவெலும் ஆற்றல் போற்றி
” அந்தகா ரம்தவிர் அருணா போற்றி
” அந்தரங் கப்பொருள் அறிந்தோய் போற்றி
” அந்தராத் மாவில் நிலைத்தோய் போற்றி

ஓம் அந்நியோந் நியமாய்ப் பழகறிவே போற்றி
,, அபசா ரம்பொறுத் தருள்வோய் போற்றி 80

,, அபயம் குருவடி என்போய் போற்றி
,, அபயம் அளித்துக் காப்பாய் போற்றி
,, அபாயம் நீக்கி அருளுவை போற்றி
,, அபிடேகம் குருவுக் காற்றுவை போற்றி
,, அபிடே கம்செயத் தூண்டுவை போற்றி
,, அபிடேகம் அன்பென அறைவோய் போற்றி
,, அபூர்வ நெறிகடைப் பிடிப்போய் போற்றி
,, அபேத நிலையில் நின்றோய் போற்றி
,, அப்ரமே யச்சுகம் அருளுவை போற்றி
,, அமயம் அறிந்து உதவுவை போற்றி 90

,, அமானுஷ் யசக்தி உடையோய் போற்றி
,, அமிர்த நிலைகளை அறிந்தோய் போற்றி
,, அமிர்த மாய்எமக் கமைந்தாய் போற்றி
,, அமிர்தம் போலுண வளிப்பாய் போற்றி
,, அமைதிச் சூழலில் அமர்ந்தோய் போற்றி
,, அமைதியாய்ச் செயல்பல ஆற்றுவை போற்றி
,, அமைதியாய் நிட்டை அமர்வோய் போற்றி
,, அமைதியாய்ப் பாடல்கள் எழுதுவை போற்றி
,, அமைதியாய் இருக்கப் பழக்குவை போற்றி
,, அமைதியாய் எமக்கரு ளூட்டுவை போற்றி 100

,, அயராது உழைக்கும் அறவோய் போற்றி
,, அயராது உழைக்கத் தூண்டுவை போற்றி
,, அயலார் தமரென எண்ணுய் போற்றி
,, அயலா ரையும்அருட் கீர்ப்போய் போற்றி
,, அயல்நாட் டிலும்புகழ் பரப்புவை போற்றி

ஓம் அயில்கைக் குமரனைப் பாடுவை போற்றி
" அரண்குரு திருவருள் என்போய் போற்றி
" அரணாய் அமைந்த அரசே போற்றி
" அரவிந்த மலர்ப்பந்தர் அமைப்போய் போற்றி
" அரவிந்தம் போலுளம் கொண்டோய் போற்றி 110

" அருள்உள் எம்கொள் அதிபா போற்றி
" அருளில் எமையும் ஆழ்த்துவை போற்றி!
" அருட்கதிர் வீசும் அருணா போற்றி
" அருட்கொடி சாமியை உகந்தோய் போற்றி
" அருட்கொடி ஏற்ற உதவுவை போற்றி
" அருட்கொடி ஏற்றி மகிழ்ந்தோய் போற்றி
" அருட்கொடிப் பள்ளிக் குதவுவை போற்றி
" அருட்சக்தி அன்னையருள் பெற்றோய் போற்றி
" அருட்சட்ட அடியர்போற் றரசே போற்றி
" அருட்சட் டம்போற் றரசே போற்றி 120

" அருட்சட் டத்திறம் பரப்புவை போற்றி
" அருட்சட் டத்தின் வாழ்வே போற்றி
" அருள்நகர் சாமிக் கன்பே போற்றி
" அருட்பா டல்பல இயற்றினை போற்றி
" அருளாளர் போற்றும் அற்புதம் போற்றி
" அருளில் மூழ்கித் திளைத்தோய் போற்றி
" அருளுப தேசம் அமைத்தனை போற்றி
" அருளே வடிவாய் அமைந்தாய் போற்றி
" அருள்மணிப் பெட்டகம் அருளினை போற்றி
" அருள்வாழ் வாற்ற அருளுவை போற்றி 130

" அர்ச்சனை ஏற்றெமக் கருள்வாய் போற்றி
" அர்ச்சனைப் பயன்பெற ஊக்குவை போற்றி

ஓம் அலங்கல் புனைந்தொளிர் அழகா போற்றி
,, அலையும் மனத்தை நிறுத்துவை போற்றி
,, அலைகடல் அமுதென ஆனாய் போற்றி
,, அவமே நாளைக் கழியாய் போற்றி
,, அழகே அன்பே அருளே போற்றி
,, அழகனை அணைந்த அன்பே போற்றி
,, அழகாய்ப் பாடல் பாடுவை போற்றி
,, அழகே உருவாய் அமைந்தாய் போற்றி 140

,, அழுக்கா ருதி இலாதோய் போற்றி
,, அழுக்கினை அகற்றும் அதிபா போற்றி
,, அழுதடி தொழும்நிலை அருள்வாய் போற்றி
,, அளப்பிலாக் கவிதை அருள்வோய் போற்றி
,, அளப்பரும் பெருமை உடையாய் போற்றி
,, அறநெறி அனைத்தும் ஆனோய் போற்றி
,, அறநெறி எமக்கும் காட்டுவை போற்றி
,, அறநெறி வாழ்வில் திளைத்தோய் போற்றி
,, அறிதுயில் கொள்ளும் அழகே போற்றி
,, அறிந்தெமை யாண்ட அரசே போற்றி 150

,, அறுசுவை யோடமு தூட்டுவை போற்றி
,, அறைபல மறைகளுக் கதிபா போற்றி
,, அற்புத ஓவியம் படைப்போய் போற்றி
,, அற்புத தரிசனம் கண்டனை போற்றி
,, அனுடத் தில்விழா ஆற்றுவை போற்றி
,, அன்பர்க் காதர வானாய் போற்றி
,, அன்பாய் அடியரை அணைப்போய் போற்றி
,, அன்புக் கடலுள் ஆழ்த்துவை போற்றி
,, அன்பின் ஒளியை அளித்தனை போற்றி
,, அன்போ டுயர்வாழ் வாற்றினை போற்றி 160

ஓம் அன்னையாய் எங்களுக் கானாய் போற்றி

" ஆகத் தைத்தளி யாக்குவை போற்றி
" ஆகமம் குருவிற் காக்கினை போற்றி
" ஆகமத் தின்உயர் வருளுவை போற்றி
" ஆகாச தத்துவம் அறிந்தோய் போற்றி
" ஆகாரம் ஈந்தறி வருள்வாய் போற்றி
" ஆகுவா கனர்உருக் கொண்டனை போற்றி
" ஆக்கம் அருள்என உரைப்பாய் போற்றி
" ஆக்கமும் ஊக்கமும் அளிப்போய் போற்றி
" ஆக்ஞைப் படிஆட் டிடுவாய் போற்றி 170

" ஆங்காரம் நீக்கி அருள்வாய் போற்றி
" ஆசா பாசம் இலாதோய் போற்றி
" ஆசா ரியர்அடி போற்றினை போற்றி
" ஆசா ரியன்புகழ் பாடுவை போற்றி
" ஆசா ரியர்க்காய் வாழ்ந்தனை போற்றி
" ஆசிலா நன்மொழி அருளுவை போற்றி
" ஆசில் நன்னெறி காட்டுவை போற்றி
" ஆடம் பரமில் அறிவே போற்றி
" ஆடிபோல் உளத்தெளி வுடையாய் போற்றி
" ஆடியில் முருகனைக் கண்டோய் போற்றி 180

" ஆட்டுவிப் போன்இறை என்போய் போற்றி
" ஆட்டுமைம் புலனை வென்றோய் போற்றி
" ஆணவம் சிறிதுமில் ஐயா போற்றி
" ஆணவம் தவிர்நெறி உரைப்போய் போற்றி
" ஆணை வழிநடந் துயர்ந்தோய் போற்றி
" ஆண்டவன் துணையென் றுரைப்போய் போற்றி
" ஆண்டவர்க் காக வாழ்ந்தனை போற்றி

ஓம் ஆண்டவர் அருளைப் பரப்புவை போற்றி
" ஆண்டவர்க் கர்ப்பணம் ஆயினை போற்றி
" ஆண்டவர் நிழலில் அமர்ந்தோய் போற்றி 190

" ஆண்டவர் திருப்பணி ஆற்றினை போற்றி
" ஆண்டவர் கோயில் அமைத்தனை போற்றி
" ஆண்டவர் அடியர்என் றுரைப்போய் போற்றி
" ஆண்டெனை ஆளும் அதிபா போற்றி
" ஆதர வாய்மொழி அருளுவை போற்றி
" ஆதாரம் அடியருக் காணுய் போற்றி
" ஆதியு மந்தமும் அறிந்தோய் போற்றி
" ஆதியை உட்கண் டுவப்போய் போற்றி
" ஆத்ம முன்னேற்றம் அருளுவை போற்றி
" ஆத்மீ கத்தில் தோய்ந்தோய் போற்றி 200

" ஆத்மீக ஒளி பரப்புவை போற்றி
" ஆநந்த பரவசம் அடைவோய் போற்றி
" ஆநந்த மாய்க்கவி பாடுவை போற்றி
" ஆநந்தக் கடலில் அமிழ்த்துவை போற்றி
" ஆபத்தில் அருந்துணை ஆவாய் போற்றி
" ஆபர ணம்என மிளிர்வாய் போற்றி
" ஆயமாய்த் தொழும்நெறி அளித்தாய் போற்றி
" ஆயத்த மாய்அடி சேர்ப்பை போற்றி
" ஆயாச மின்றி உழைப்போய் போற்றி

" ஆயில்ய விண்மீனில் உதித்தனை போற்றி 210
" ஆயிரம் பாடல் அருளுவை போற்றி
" ஆயிரம் நற்செயல் ஆற்றினை போற்றி
" ஆயுதம் அருள்என் றுரைப்போய் போற்றி
" ஆரண முதற்கலை அறிந்தோய் போற்றி

ஓம் ஆரமுதம் உண்டுள் அமர்ந்தோய் போற்றி
" ஆரவா ரமிலா தருள்வோய் போற்றி
" ஆரியன் எனஎமக் கமைந்தாய் போற்றி
" ஆருயிர்க் கருந்துணை ஆனாய் போற்றி
" ஆருயிர் துன்பம் துடைப்பாய் போற்றி
" ஆருயிர் சூக்குமம் அறிந்தனை போற்றி 220

" ஆருயிர்க் கரும்பணி ஆற்றினை போற்றி
" ஆர்த்திடு தளைகள் அறுப்போய் போற்றி
" ஆர்வலர் போற்றும் அருட்கவி போற்றி
" ஆர்வமு ளார்க்கருள் புரிவோய் போற்றி
" ஆலயம் குருவுக் கமைத்தனை போற்றி
" ஆலயத் துள்ளமர்ந் தொளிர்வாய் போற்றி
" ஆலயத் திற்கெமை அழைப்பாய் போற்றி
" ஆலசி யமிலா தருள்வோய் போற்றி
" ஆலவாய் கணபதிக் கன்பே போற்றி
" ஆலோசித் துச்செயல் ஆற்றுவை போற்றி 230

" ஆலோ சனைபல அளிப்பாய் போற்றி
" ஆல்போல் அருநிழல் அருள்வோய் போற்றி
" ஆவினை நிகர்த்தெமை ஆள்வோய் போற்றி
" ஆளா யெமையேற் றருள்வோய் போற்றி
" ஆருதா றம்நன் கறிந்தோய் போற்றி
" ஆருதா ரத்தெமை ஏற்றுவை போற்றி
" ஆறுதல் கூறிஅரு ளளிப்பாய் போற்றி
" ஆறு போல்அருளை வழங்கினை போற்றி
" ஆற்றல் மிகமிக உடையோய் போற்றி
" ஆற்றலெ லாம்எமக் கருள்வோய் போற்றி 240

" ஆற்றெழுக் கெனபொருள் உரைப்போய் போற்றி
" ஆனத்தூ ரில்அவ தரித்தோய் போற்றி

ஓம் ஆனந்த வாழ்வெமக் கீந்தோய் போற்றி
,, ஆனந்த மாய்ப்பயன் அடைந்தோய் போற்றி
,, ஆன்ம தரிசனம் பெற்றோய் போற்றி
,, ஆன்றோர் புகழணி அணிந்தோய் போற்றி

,, இகம்பரம் அனைத்தும் ஆனாய் போற்றி
,, இகபர நெறிகளை விளக்குவை போற்றி
,, இங்கித மாய்உரை யாற்றுவை போற்றி
,, இங்குள் ளான்இறை என்போய் போற்றி 250

,, இசையின் பயனை அறிந்தோய் போற்றி
,, இசைபா டும்நற் குயிலே போற்றி
,, இசையால் இறைவனை அடைந்தோய் போற்றி
,, இச்சை யேதுமில் எந்தாய் போற்றி
,, இடகலை பிங்கலை அறிந்தோய் போற்றி
,, இடம்பொருள் அறிந்து இயம்புவை போற்றி
,, இடரின்றி எம்மைக் காப்போய் போற்றி
,, இடித்துரைத் துநலம் ஈவோய் போற்றி
,, இட்டமாய் எங்களை ஈர்ப்பாய் போற்றி
,, இணையெவ ரும்இலா இயல்பே போற்றி 260

,, இதமாய் இயல்மொழி இயம்புவை போற்றி
,, இதய சுத்தி உடையோய் போற்றி
,, இந்துமண் டலத்தமு தருத்துவை போற்றி
,, இந்த்ரியச் சேட்டையை எரித்தோய் போற்றி
,, இமையவர் போற்றும் இயல்பே போற்றி
,, இம்மியும் குற்றம் இலாதாய் போற்றி
,, இம்மெனுமுன் பாடல் எழுதுவை போற்றி
,, இயக்கம் குருவருள் என்போய் போற்றி
,, இயங்கு வித்தருளை ஊட்டுவை போற்றி
,, இயற்றவப் பொலிவோ டிலங்குவை போற்றி 270

ஓம் இயலிசை நாடகம் அளித்தோய் போற்றி
" இயற்கையின் பெருமை இயம்புவை போற்றி
" இயற்கையோ டியைந்தவாழ் வாற்றினை போற்றி
" இரக்கம் மிகவுடை எந்தாய் போற்றி
" இரவொடு பகலில் இடத்தோய் போற்றி
" இராமலிங் கர்அருள் அறிந்தோய் போற்றி
" இராமலிங் கர்வழி பெற்றனை போற்றி
" இருடியர் போற்றும் இயல்போய் போற்றி
" இருடியர் பட்டியில் இருப்போய் போற்றி
" இருநில மீதருள் பொழிவோய் போற்றி 280

" இரும்பு மனத்தையும் இளக்குவை போற்றி
" இருவினை கடந்து ஒளிர்வாய் போற்றி
" இரேவதி விழாபல எடுத்தனை போற்றி
" இலக்கண இலக்கியம் அறிந்தோய் போற்றி
" இலக்கை அடைய ஊக்குவை போற்றி
" இலக்கியம் பற்பல இயற்றினை போற்றி
" இல்லறத் தார்உயச் செய்தாய் போற்றி
" இல்லற நெறியினை விளக்குவை போற்றி
" இல்லைக் கோயில் ஆக்கினை போற்றி
" இல்லை யெனும்சொல் இலாதாய் போற்றி 290

" இழிந்தோன் எனையும் ஆள்வாய் போற்றி
" இழுக்கற் றிலங்கும் எழிலே போற்றி
" இளகிய நன்மனம் உடையோய் போற்றி
" இளமையில் அருள்தனை அடைந்தோய் போற்றி
" இளைப்பறி யாதுழைத் திடுவோய் போற்றி
" இறப்புபிறப் பிலாநிலை அடைந்தோய் போற்றி
" இறைநிலை ஓதிடும் இங்கித போற்றி
" இனிக்கும் அருள்மொழி ஓதுவை போற்றி
" இன்ப மெல் லாம்தரும் இறையே போற்றி

ஓம் இன்றியமை யாநெறி அறிந்தோய் போற்றி 300

" ஈகையிற் சிறந்த எந்தாய் போற்றி
" ஈசுரன் குருவென இயம்புவை போற்றி
" ஈடில் ஆசானாய் இருப்போய் போற்றி
" ஈடேறும் மொழி உரைப்பாய் போற்றி
" ஈறு தவிர்த்தருட் கீர்ப்பாய் போற்றி
" ஈனமில் மெய்ந்நெறி பற்றினை போற்றி
" ஈன்ரு ளினும்மிக இனியோய் போற்றி

" உகந்தெமை ஆளும் உடையவ போற்றி
" உகம்எண் ணிலவாழ் உரவோய் போற்றி
" உசிதச் செயல்செய உய்ப்பாய் போற்றி 310

" உடம்பின் தத்துவம் அறிந்தோய் போற்றி
" உடல்பொ ருள்ஆவிஅர்ப் பணித்தோய் போற்றி
" உடைமை குருவருள் என்போய் போற்றி
" உடையவன் கணக்கினை அறிந்தோய் போற்றி
" உடையா உள்ளம் உடையோய் போற்றி
" உடையவன் பொறுப்பென் றுரைப்போய் போற்றி
" உட்கரணத் தூய்மை அளிப்பாய் போற்றி
" உட்பொருள் உணர்ந்த உத்தம போற்றி
" உணர்வரி தாம்மெய் யுணர்வே போற்றி
" உணவளித் தின்பம் அடைவோய் போற்றி 320

" உணவுடன் அருளையும் ஊட்டுவை போற்றி
" உண்டி சுருக்க உணர்த்துவை போற்றி
" உண்மையின் உயர்வாய் வாழ்ந்தனை போற்றி
" உண்ணெகிழ் அடியார்க் குதவுவை போற்றி
" உண்மையின் ஒளியென ஒளிர்வாய் போற்றி
" உண்மை யுணர்த்திடும் உயர்பொருள் போற்றி

ஓம் உண்மையுள் உண்மையாய் உள்ளாய் போற்றி
" உண்மை வழியில் நின்றேய் போற்றி
" உண்மையாய் உழைத்த உத்தம போற்றி
" உண்டொரு தெய்வம் என்போய் போற்றி 330

" உதவி மிகப்புரி உத்தம போற்றி
" உதவுதல் உயர்வென் றுரைப்போய் போற்றி
" உதாசினம் செயாதருள் பெற்றவா போற்றி
" உதாரணம் யார்க்கும் ஆனாய் போற்றி
" உதார குணம்உடை உயர்வே போற்றி
" உத்தமச் செயல்கள் செய்தோய் போற்றி
" உத்தம ராயெமை ஆக்குவை போற்றி
" உத்தமர் பலர்நட் புடையோய் போற்றி
" உத்தா ரணம்செய் தூக்குவை போற்றி
" உத்திரட் டாதியில் ஒடுங்கினை போற்றி 340

" உந்தி அருட்செயற் கூக்குவை போற்றி
" உந்துதல் இல்லா துழைப்போய் போற்றி
" உபதேசம் பெற்ற உத்தம போற்றி
" உபதேசம் போற்றி உயர்ந்தோய் போற்றி
" உபதேசம் குருமொழி என்போய் போற்றி
" உபதேசம் எங்களுக் குரைப்போய் போற்றி
" உபநிட சாரம் உரைப்போய் போற்றி
" உபவா சம்மிகப் புரிவோய் போற்றி
" உபமா னம்பல அருளுவை போற்றி
" உபாதி யிலாவாழ் வருளுவை போற்றி 350

" உமைமகன் அருட்புகழ் பாடுவை போற்றி
" உப்பர் வியக்கும் ஒருவா போற்றி
" உயர்தவம் பேணிட ஊக்குவை போற்றி
" உயர்ந்தோர் நட்பில் திளைத்தோய் போற்றி

ஓம் உயிர்க்குயி ராயெமக் கானாய் போற்றி
" உயிர்க்குறு நோய்பல தீர்ப்பாய் போற்றி
" உயிர்உயும் மருந்தாய் ஒளிருவை போற்றி
" உயிர்தொறும் இருந்தொளி யூட்டுவை போற்றி
" உயிர்த்தொகைக் கருள்புரிந் தோம்புவை போற்றி
" உரமிகு மனமுடை உத்தம போற்றி 360

" உரிமையொ டெமைத்திருத் துயர்வே போற்றி
" உரிமையும் கடமையும் உணர்த்துவை போற்றி
" உருகடி யவர்களுக் குதவுவை போற்றி
" உருவம் கொண்டிவண் வந்தனை போற்றி
" உருவும் அருவும் அறிந்தோய் போற்றி
" உருள்பல பிறப்பை அழித்தோய் போற்றி
" உரைமன மெட்டரும் ஒளியே போற்றி
" உரைக்கொணாப் புலமை உடையோய் போற்றி
" உரோகம் அனைத்தும் ஒழிப்பாய் போற்றி
" உலகில் நிலைத்த புகழோய் போற்றி 370

" உலகில் வாழ்நெறி காட்டினை போற்றி
" உலகு போற்றும் உத்தம போற்றி
" உலகுக் கொளிவிளக் கானாய் போற்றி
" உலைவில் அருள்திரு உடையாய் போற்றி
" உல்லாச மொழிபல உரைப்போய் போற்றி
" உவட்டா தினிக்கும் அமுதே போற்றி
" உவகைக் கடல்மீ துறைவாய் போற்றி
" உழைப்பினில் உயர்வைக் கண்டோய் போற்றி
" உழைப்பினில் உறுதி உடையாய் போற்றி
" உளம்நிறை அமுதெனப் பொலிவாய் போற்றி 380
" உளத்தில் குருவை அமர்த்தினை போற்றி
" உளத்தைத் திருடி உவந்தனை போற்றி

ஓம் உளம்திருக் கோயிலென் றொளிர்ந்தனை போற்றி
" உளத்தில் ஊக்கம் உடையாய் போற்றி
" உளத்துற வேற்றிலில் வாழ்ந்தனை போற்றி
" உளமுரு கச்செயும் ஒருவா போற்றி
" உளம்குழை வித்தரு ளூட்டுவை போற்றி
" உள்குமுன் வந்து உதவுவை போற்றி
" உள்ளக் கருத்தை ஒளியாய் போற்றி
" உள்ளத் தடங்கி உயர்ந்தாய் போற்றி 390

" உள்ளத்தில் அருளை ஊன்றுவை போற்றி
" உள்ளத் தைஆடி ஆக்கினை போற்றி
" உள்ளும் புறமும் பொலிவோய் போற்றி
" உறங்கா துறங்கி உயர்ந்தோய் போற்றி
" உறவெமக் காகி ஒளிர்ந்தனை போற்றி
" உறுதியாய்ச் செயல்பல ஆற்றினை போற்றி
" உறுதி தரும்பொருள் உரைப்பாய் போற்றி
" உறுதுணை யாயெமைக் காப்பாய் போற்றி
" உறுப்பெலாம் அருள்மயம் ஆக்கினை போற்றி
" உற்சவம் பற்பல ஆற்றினை போற்றி 400

" உன்னற் கரும்பணி ஆற்றினை போற்றி
" உன்னத வாழ்வீந் துவப்போய் போற்றி

" ஊக்கத் தோடருள் பெற்றனை போற்றி
" ஊக்கம் கொடுத்தெமை உயர்த்துவை போற்றி
" ஊக்கம்மிக் கூட்டியுள் ஒளிர்வாய் போற்றி
" ஊசலி லாஉளம் கொண்டனை போற்றி
" ஊடிடா தெமையும் ஆள்வோய் போற்றி
" ஊதியம் குருவருள் என்போய் போற்றி
" ஊதியத் தைஅற மாக்கினை போற்றி
" ஊத்தையேன் பிழைகள் கருதாய் போற்றி 410

ஓம் ஊரார் போற்றும் உத்தம போற்றி
,, ஊருணி நீரென உதவினை போற்றி
,, ஊருக் குதவி மகிழ்ந்தனை போற்றி
,, ஊரூர் தொறும்சென் றருளினை போற்றி
,, ஊர்த்துவ நோக்கம் பெற்றனை போற்றி
,, ஊழியம் கொண்டெமைக் காப்பாய் போற்றி
,, ஊழை வென்று உயர்ந்தோய் போற்றி
,, ஊறு தவிர்த்தருள் ஊட்டுவை போற்றி
,, ஊனமில் செயல்கள் ஆற்றுவை போற்றி
,, ஊனமில் நெறியால் உயர்ந்தனை போற்றி 420

,, எங்கடி யவர்உளர் அங்குளாய் போற்றி
,, எங்கணும் அருளொளி காணுவை போற்றி
,, எங்களுக் கருளொளி ஊட்டுவை போற்றி
,, எங்களை ஆண்டருள் எந்தாய் போற்றி
,, எங்கும் இறைவனைக் கண்டாய் போற்றி
,, எங்கும் நிறைந் தெமைக் காப்பாய் போற்றி
,, எச்சரிக்கை யாயெமைக் காப்பாய் போற்றி
,, எஞ்சா தருளை ஏற்றோய் போற்றி
,, எண்வகைப் பண்பும் எய்தினோய் போற்றி
,, எண்ண மெலாம்நிறை வேற்றுவை போற்றி 430

,, எண்ணிய எண்ணியாங் கெய்தினை போற்றி
,, எண்ணென எழுத்தென இலங்குவை போற்றி
,, எதுகை மோனையொடு பாடுவை போற்றி
,, எத்திக் கும்தொழும் இறைவா போற்றி
,, எத்திரு வும் தரும் எந்தாய் போற்றி
,, எப்பொரு ளும்தரும் இறைவா போற்றி
,, எம்பி ரானென இலங்குவை போற்றி
,, எம்மவர் இடர்தவிர் எந்தாய் போற்றி
,, எய்தவொ ணாப்புகழ் எய்தினை போற்றி

ஓம் எல்லா நலமும் வழங்குவை போற்றி 440

" எல்லாம் செய்திட வல்லாய் போற்றி
" எல்லையி லாப்புகழ் உடையோய் போற்றி
" எவரிட மும்தயை உடையோய் போற்றி
" எழுமனம் அடக்கி அருளுவை போற்றி
" எளிதாய் அரும்பொருள் விளக்குவை போற்றி
" என்று மிருந்தருள் இறைவா போற்றி
" என்னையு மீர்த்தருள் செய்வோய் போற்றி

" ஏகம்பனைப் பாடிய ஏந்தலே போற்றி
" ஏக நாயகனோ டிணைந்தனை போற்றி
" ஏகாட் சரப்பொருள் அறிந்தோய் போற்றி 450

" ஏதம் அறுத்தருள் இறைவா போற்றி
" ஏழைக ளுக்கிரங் கிடுவோய் போற்றி

" ஐங்கர னுக்கன்பன் ஆனாய் போற்றி
" ஐந்து புலன்களை வென்றோய் போற்றி
" ஐயம் அகற்றும் அரசே போற்றி

" ஒடுக்குக புலன்களை என்போய் போற்றி
" ஒப்பனை காணரும் ஒருவா போற்றி
" ஒப்புர வொழுக வாழ்ந்தனை போற்றி
" ஒப்புயர் வற்றொளிர் ஒண்தவம் போற்றி
" ஒருநொடி யினில்நலம் ஊட்டுவை போற்றி 460

" ஒலிவகை ஒளிவகை ஆயினை போற்றி
" ஒழுக்க முளோரை உயர்த்துவை போற்றி
" ஒளிமிகு மாறருள் புரிவோய் போற்றி
" ஒற்றுமை பலமென உரைப்பாய் போற்றி
" ஒன்றெனப் பலவென ஆனாய் போற்றி

ஓம் ஒன்றே இறையென ஓதுவை போற்றி

" ஓங்கருட் கொடிபுகழ் பாடுவை போற்றி
" ஓங்கா ரத்தில் திளைத்தோய் போற்றி
" ஓதரி தாம்புகழ் உடையோய் போற்றி
" ஒய்விலா துழைக்கும் உத்தம போற்றி 470

" ஓமை உளத்தினில் ஊன்றுவை போற்றி
" ஓம்பொரு ளாயொளிர் ஒண்மணி போற்றி
" ஓம்பொரு ளெமக்கும் உரைப்பாய் போற்றி

" ஔடத மாய்எமக் காஞய் போற்றி

" கங்கணம் போலெமைக் காப்பாய் போற்றி
" கங்குலும் பகலும் உழைப்போய் போற்றி
" கங்கையில் மூழ்கிக் களித்தோய் போற்றி
" கசடறுத் தருளொளி காட்டுவை போற்றி
" கசியும் உளங்கொள் கற்பகம் போற்றி
" கஞ்சம் நிகர்மனம் உடையாய் போற்றி 480

" கடமைகள் உணர்த்திடும் கண்மணி போற்றி
" கடல்போல் அறிவுடைக் கற்பகம் போற்றி
" கடாவிப் பணிசெய ஊக்குவை போற்றி
" கடிமலர் சூட்டி மகிழ்வோய் போற்றி
" கடினமில் நன்னெறி கழறுவை போற்றி
" கடினமாம் மனத்தினர் காஞெய் போற்றி
" கடைக்கண் அருள்புரி கற்பகம் போற்றி
" கட்டறுத் துண்மை கண்டனை போற்றி
" கட்டறுத் தருளொளி காட்டுவை போற்றி
" கணபதி கருணை பெற்றனை போற்றி 490

" கணபதிக் கண்ணி பாடினை போற்றி

ஓம் கணபதி பெருமை பரப்புவை போற்றி
" கணபதி தோற்றம் உடையாய் போற்றி
" கணபதி ஆலயம் கட்டினை போற்றி
" கனுவிலாக் கரும்பென இனிப்பாய் போற்றி
" கண்டென இனிக்கும் காவல போற்றி
" கண்ணென ஒளியென இலகுவை போற்றி
" கண்ணோட் டம்தந் தாள்வாய் போற்றி
" கதிபெற உயர் நெறி காட்டுவை போற்றி
" கதுமென வந்தெமக் கருள்வோய் போற்றி 500

" கபடமில் லாமொழி கழறுவை போற்றி
" கபடமில் வாழ்விங் காற்றினை போற்றி
" கமல பதத்தினிற் கலந்தனை போற்றி
" கமழ்மலர் மாலைபோன் றிலகுவை போற்றி
" கரம்சிர மீதுவைத் தருளுவை போற்றி
" கரணங் களைநன் றடக்கினை போற்றி
" கரவொரு சிறிதுமில் கவினே போற்றி
" கருவியாய் குருபணி ஆற்றினை போற்றி
" கருணை யெனும்பாற் கடலே போற்றி
" கருணை ததும்புரை ஆற்றுவை போற்றி 510

" கருணைமிகு வள்ளல் எழுதினை போற்றி
" கரைகா ணுஅருட் கடலே போற்றி
" களையிலா நூல்கள் இயற்றினை போற்றி
" கர்வம் சிறிதுமில் கனகமே போற்றி
" கலங்கரை விளக்கமென் றமைந்தாய் போற்றி
" கலங்கிடு வோர்துயர் களைவோய் போற்றி
" கலியினில் வாழ்ந்த தெய்வமே போற்றி
" கலி யெலாம் நீக்கும் கடவுளே போற்றி

* ஓம் கலிவர தர்புகழ் பாடுவை போற்றி
,, கலைமலி ஓவியம் தீட்டுவை போற்றி 520

,, கலைநிறை காவியம் இயற்றுவை போற்றி
,, கலைகளை விளக்கி யருள்வோய் போற்றி
,, கலைஞர் பால் பட்டம் பெற்றனை போற்றி
,, கலைஞர்கள் போற்றும் கலைஞனே போற்றி
,, கலைமகள் அருள்மிகப் பெற்றனை போற்றி
,, கலைநிறை தளிகள் சென்றனை போற்றி
,, கலைகளைக் கண்டதில் மூழ்குவை போற்றி
,, கல்லினை யும்கனி யாக்குவை போற்றி
,, கல்வியின் பயனுணர் கண்மணி போற்றி
,, கவசம் போலெமக் கமைந்தாய் போற்றி 530

,, கவலை யில்லாவாழ் வாற்றினை போற்றி
,, கவின்மிகு பாடல்கள் பாடுவை போற்றி
,, கழகத் தோர்புகழ் கற்பகம் போற்றி
,, களங்க மிலாதொளிர் கண்மணி போற்றி
,, களஞ்சிய மாயருள் சேர்த்தாய் போற்றி
,, களைகளைய் எம்துயர் களைவாய் போற்றி
,, கள்ளக் கருத்தினைக் களைவாய் போற்றி
,, கள்ளமோர் அணுவுமில் கற்பகம் போற்றி
,, கறங்கெனத் திரிமனம் அடக்குவை போற்றி
,, கற்பகம் போலெமைக் காப்பாய் போற்றி 540

,, கற்பனை சிறிதுமில் காவலா போற்றி
,, கற்பின் பெருமை கழறுவை போற்றி
,, கற்றவர் போற்றும் காவல போற்றி

* கலிவரதர்-பாலகவி சுவாமிகள் அவதரித்த ஆனத்தூரில் உள்ள விநாயகர்.

ஓம் கனக சபைதனைப் பாடினை போற்றி
" கனலெனக் குற்றம் களைவாய் போற்றி
" கனவினிற் காட்சிகள் கண்டோய் போற்றி
" கனிவுறு நன்னெறி காட்டுவை போற்றி
" கன்மம் அனைத்தும் கரைப்போய் போற்றி

" காக்கும் கடவுள் ஆனாய் போற்றி
" காப்ப துன்பரம் கண்டாய் போற்றி 550

" காசியை உட்கண்டு களிப்பாய் போற்றி
" காஞ்சியில் பலநாள் தங்கினை போற்றி
" காணரும் காட்சிகள் காட்டுவை போற்றி
" காதலாய்க் குருபதம் சார்ந்தனை போற்றி
" காமதே னுகுரு என்போய் போற்றி
" காமாதி அணுகாக் கனலே போற்றி
" காயம் ஆலய மாக்கினை போற்றி
" காரண காரியம் ஆனோய் போற்றி
" காரண குருவருள் பெற்றோய் போற்றி
" காரணம் யாவும் அறிந்தனை போற்றி 560

" காரியம் பற்பல ஆற்றினை போற்றி
" காரியம் செய்ய ஊக்குவை போற்றி
" காருண்ய மயம் ஆக்குவை போற்றி
" காலம் அறிந்து உதவுவை போற்றி
" காலத்தின் அருமை அறிந்தோய் போற்றி
" காலம்கரு திப்பணி செய்வோய் போற்றி
" காலனை வென்றொளிர் கவினே போற்றி
" காலையில் கர்த்தனைப் பாடுவை போற்றி
" காலையில் குருவருள் பெற்றனை போற்றி
" காவியம் பற்பல இயற்றினை போற்றி 570

ஓம் காவியத் தின்சுவை அறிந்தோய் போற்றி
" காவியச் சொற்பொழி வாற்றினை போற்றி
" கிரகதாச் ரமத்தில் இருந்தனை போற்றி
" கிரமமாய் அருள்தனைப் பெற்றனை போற்றி
" கிரியைகள் யாவும் கடந்தோய் போற்றி
" கிரியைபற் பலசெய ஊக்குவை போற்றி
" கிருட்டின மூர்த்தியுடன் இருந்தோய் போற்றி
" கீர்த்தனம் பற்பல இயற்றினை போற்றி
" கீர்த்தனம் இசையுடன் பாடுவை போற்றி
" கீர்த்தி மிகமிகப் பெற்றனை போற்றி 580
" கீர்த்தி யாம்பெற உதவுவை போற்றி
" கீழ்மைச் செயல்கள் தவிர்த்தோய் போற்றி
" குகையினுள் நோற்கச் சென்றோய் போற்றி
" குச்சுமச் சொன்றென எண்ணினை போற்றி
" குடியாய் என்னுளம் கொண்டனை போற்றி
" குடும்பத் தினைவாழ் விப்போய் போற்றி
" குணக்குன் றெனவொளிர் கோமகன் போற்றி
" குணபே தமிலா தொளிர்வோய் போற்றி
" குணமாய் வாழப் பயிற்றுவை போற்றி
" குண்டலி யினைவச மாக்கினை போற்றி 590
" குதூகல மாய்ச்செயல் செய்வாய் போற்றி
" குபேரச் செல்வமாய்த் திகழ்வாய் போற்றி
" குமைந்திடும் வினைகளை ஒழிப்பாய் போற்றி
" கும்பகத் தினில்நிலைத் திடுவோய் போற்றி
" கும்மிப் பாடல்கள் பாடினை போற்றி
" குயில்போல் பாடும் குரவா போற்றி
" குருகரு ணைக்கா ளாயினை போற்றி
" குருகாட் டும்நெறி பற்றினை போற்றி

ஓம் குருகுலம் அடியரென் றுரைப்போய் போற்றி
" குருகொள்கை பரப்பும் கோமான் போற்றி 600
" குருகொள் கைவழி நிற்போய் போற்றி
" குருகோ மகனைக் கண்டோய் போற்றி
" குருக்களிற் சிறந்தொளிர் குரவா போற்றி
" குருடனும் எனக்குறும் வழியே போற்றி
" குருதியுள் கலந்த கோமான் போற்றி
" குருநா தன்அருள் பெற்றனை போற்றி
" குருமூர்த்தி பெருமை அறிந்தனை போற்றி
" குலமுழு தடிமை என்றாய் போற்றி
" குவலயம் போற்றும் குணமணி போற்றி
" குவியு மனமெனக் கருள்வாய் போற்றி 610
" குழந்தைக் குணமுடை குழகா போற்றி
" குழையும் நல்உள்ளம் கொண்டோய் போற்றி
" குழைத்தெமை யாளும் குரவா போற்றி
" குழைந்து குழைந்துகூத் தாடுவை போற்றி
" குறிகுணம் கடந்தொளிர் கோமளம் போற்றி
" குறைகளெலாம்பொறுத் தாளுவை போற்றி
" குற்றமில் நல்லறி வருளுவை போற்றி
" குற்றம் காணு குணமணி போற்றி
" குன்றுநி கர்தவம் ஆற்றினை போற்றி
" கூடுமெய் யன்பினுட் கூட்டுவை போற்றி 620
" கூத்தன் குரைகழல் போற்றுவை போற்றி
" கூப்பிட் டெமைஅருட் குய்ப்பாய் போற்றி
" கூர்த்த மதியுடைக் குழகா போற்றி
" கூழ்உண வளித்து மகிழ்ந்தனை போற்றி
" கூற்றினை வெல்வழி அறிந்தனை போற்றி

ஓம் கெட்ட தகற்றக் கிட்டுவை போற்றி
" கெம்பு நிகர்மனம் உடையவா போற்றி
" கேடில் உயர்நெறி பற்றினை போற்றி
" கேட்ட தெலாம்தரு கிழியே போற்றி
" கேந்திரம் குருவடி என்றனை போற்றி 630
" கேளாய் ஏன்றெமை ஆண்டனை போற்றி
" கேள்வியின் பயனறிந் தூக்கினை போற்றி
" கைகண்ட பலனெமக் கருளுவை போற்றி
" கைகொடுத் தெமைநிலைக் கழைப்பவா போற்றி
" கைங்கரியம் செயும்வழி காட்டினை போற்றி
" கைப்பொரு ளினுமிகு மெய்ப்பொருள் போற்றி
" கைம்மாறு கருதாது உழைத்தோய் போற்றி
" கைலாயக் காட்சி கண்டனை போற்றி
" கைவிடா தெங்களைக் காப்பாய் போற்றி
" கொடுமை தவிர்த்தருள் கொடுப்பாய் போற்றி 640
" கொடைவடி வாயொளிர் கோமளம் போற்றி
" கொடைபல செய்த குணமணி போற்றி
" கொலுவீற் றிருந்தெமைக் காப்பாய் போற்றி
" கொள்கையிற் குறிக்கோள் உடையவா போற்றி
" கொள்கையை நிலைநாட் டிடுவாய் போற்றி
" கொள்கையில் நிலைக்கப் பணிப்போய் போற்றி
" கொற்றம் பெறவழி காட்டுவை போற்றி
" கோகன கப்பதம் கொடுப்பாய் போற்றி
" கோதறு நன்னெறி கூறுவை போற்றி
" கோபமே காணரும் குணமணி போற்றி 650

ஓம் கோயில் திருப்பணி ஆற்றினை போற்றி
" கோயில் குருவுக் காக்கினை போற்றி
" கோயில் கொண்டுளம் களித்தாய் போற்றி
" கோயிலாய் என்னுளம் கொண்டனை போற்றி
" கோரிய காரியம் முடிப்பாய் போற்றி
" கோலோச்சி குருவருள் பெற்றனை போற்றி
" கோள்பய மில்லாக் கோமான் போற்றி

" கௌரவ மிக்குடை கண்யா போற்றி
" கௌரிசேய் அருளைப் பெற்றனை போற்றி

" சகஜமாய்ப் பேசும் சாமர்த்தியனே போற்றி 660

" சகஸ்ரநாமம் எழுதிய சதுரா போற்றி
" சகஸ்ர கலைகளை அறிந்தோய் போற்றி
" சகஸ்ர நாமம் கொண்டோய் போற்றி
" சகல கலைகளின் சாரமே போற்றி
" சகுண உபாசனை செய்தோய் போற்றி
" சங்கத்திற் குழைத்த சதுரா போற்றி
" சங்கத் தமிழை அறிந்தோய் போற்றி
" சச்சிதா னந்தப் பொருளே போற்றி
" சஞ்சிதம் ஏதுமில் சதுரா போற்றி
" சட்சு தீட்சைசெய் தாள்வாய் போற்றி 670

" சட்டநன் னெறியில் நிலைத்தோய் போற்றி
" சட்டத் தின்சிறப் போதுவை போற்றி
" சட்டத்தில் அடியரைச் சேர்த்தோய் போற்றி
" சட்ட அடியரைப் புரப்போய் போற்றி
" சத்தியத் தின்வழி நின்றனை போற்றி
" சத்தியம் ஓம்பச் சாற்றுவை போற்றி
" சந்தமார் பாடல் செப்பினை போற்றி

ஓம் சந்தனம் போல்மணம் வீசுவை போற்றி
,, சபையினர் போற்றும் தலைவா போற்றி
,, சமய பேதத்திறம் அறிந்தனை போற்றி 680

,, சமயம் அனைத்தும் உணர்ந்தோய் போற்றி
,, சமயா தீதப் பொருளே போற்றி
,, சம்பூர்ண ஞானம் அடைந்தோய் போற்றி
,, சரண கமலம் அருள்வாய் போற்றி
,, சரணம் குருவடிக் கென்போய் போற்றி
,, சரணம் என்றடி தொழுதோம் போற்றி
,, சராசரத் தில்குருவைக் கண்டனை போற்றி
,, சர்க்கரை போல்மொழி அருளுவை போற்றி
,, சர்வ சித்திகளும் ஆற்றுவை போற்றி
,, சர்வமும் தியாகம் செய்தனை போற்றி 690

,, சலனமி லாதொளிர் சாந்தா போற்றி
,, சற்குரு பெருமையைச் சாற்றுவை போற்றி
,, சற்குரு தாசனாய்த் திகழ்ந்தனை போற்றி
,, சற்குரு நாமாவளி சாற்றினை போற்றி
,, சன்னிதா னத்திற் குழைத்தனை போற்றி
,, சன்னிதி திருப்பணி ஆற்றினை போற்றி
,, சன்னிதி யில்அமர்ந் தொளிர்வோய் போற்றி

,, சாகா நிலையை அடைந்தோய் போற்றி
,, சாதனம் பேணிடச் சாற்றுவை போற்றி
,, சாதனம் செய்தொளி கண்டனை போற்றி 700

,, சாதி வேற்றுமை இலாதாய் போற்றி
,, சாதுக்கள் போற்றும் சாதுவே போற்றி
,, சாத்திரம் பற்பல அறிந்தனை போற்றி
,, சாத்திரத் தின்வழி செப்புவை போற்றி

ஓம் சாந்தி நிழல்தரு தருவே போற்றி
" சாமியா யெமக்கருள் சுரப்பாய் போற்றி
" சாரமாம் மொழிபல சாற்றுவை போற்றி
" சால்புக் கிலக்கியம் ஆனாய் போற்றி
" சாற்றரி தாம்புகழ் உடையோய் போற்றி
" சான்றோர் குழுவுள் இருப்போய் போற்றி 710

" சிக்கல் அனைத்தையும் தீர்ப்போய் போற்றி
" சிக்கென குருபதம் பற்றினை போற்றி
" சிட்டர் களாயெமை ஏற்பாய் போற்றி
" சிதாகா சநிலை அறிந்தோய் போற்றி
" சித்தர் குழாம்புகழ் செல்வா போற்றி
" சித்தம் தெளிந்திடச் செய்வோய் போற்றி
" சித்தி யெலாமும் தெரிந்தனை போற்றி
" சிந்தனை இறைபால் சேர்ப்போய் போற்றி
" சிந்தை யைநன்று திருத்துவை போற்றி
" சிவச்செயல் யாவுமென் றோர்ந்தனை போற்றி 720

" சிற்சபை மேவித் திகழுவை போற்றி
" சிற்பர சின்மயச் செல்வா போற்றி
" சின்முத் திரையில் திளைத்தாய் போற்றி

" சீட ராய்எமை ஏற்றாய் போற்றி
" சீடரை நாடிச் செல்பவ போற்றி
" சீதநீ ரின்திறம் செப்பினை போற்றி
" சீமான் எனவாழ் வாற்றினை போற்றி
" சீரில கும்பெருந் திருவே போற்றி
" சீவகா ருண்யம் உடையோய் போற்றி
" சீவன் முத்தநிலை அடைந்தோய் போற்றி 730

" சீற்றம் தவிர்கென உரைப்போய் போற்றி

ஓம் சுகிர்த மாய்உரை யாற்றுவை போற்றி
" சுசிமிக உடைய தூயா போற்றி
" சுடர்மிகு கதிரெனத் தோன்றுவை போற்றி
" சுதர்மம் நடத்திய தூயா போற்றி
" சுத்த மனத்தொளிர் சுடரே போற்றி
" சுத்தி புரிந்தருள் சுடரொளி போற்றி
" சுபச்செ யல்செய ஊக்குவை போற்றி
" சுப்ர பாதம் பாடினை போற்றி
" சுமதி கொடுக்கும் தூயவ போற்றி 740

" சுயமாய்ப் பணிபல ஆற்றுவை போற்றி
" சுயமாய்த் திருவருள் பெற்றனை போற்றி
" சுயமாய் வாழப் பழக்குவை போற்றி
" சுருதி குருவுக் காக்கினை போற்றி
" சுவாமிநாதன் போற்றும் மூர்த்தி போற்றி
" சுவையறிந் தூட்டும் தூயவ போற்றி
" சுற்றமாய் எங்களை ஏற்போய் போற்றி

" சூக்கும உணர்வருள் தூயோய் போற்றி
" சூட்டும் பலதொடை சூட்டுவை போற்றி
" சூத்திர நிலைபல அறிந்தோய் போற்றி 750

" சூரியன் போல்புகழ் பெற்றனை போற்றி
" சூழ்ந்தோர் துன்பம் துடைப்பாய் போற்றி

" செகத்தில் அற்புதம் ஆற்றுவை போற்றி
" செங்கோல் குருவிடம் பெற்றோய் போற்றி
" செந்தமிழ்ப் புலமை உடையாய் போற்றி
" செந்தமிழ் நல்லுரை ஆற்றுவை போற்றி
" செந்நெறி கூறித் தெருட்டுவை போற்றி
" செப்பமார் நெறிசொலும் செல்வா போற்றி

ஓம் செம்பொருள் விளக்கம் செப்புவை போற்றி
" செம்மையாய்க் காக்கும் குருவே போற்றி 760

" செம்மை யெலாம்தரு செல்வா போற்றி
" செயல்களைச் செம்மை ஆக்குவை போற்றி
" செயல்திறம் எமக்கும் அருளுவை போற்றி
" செல்வமாய் எமக்குச் செழித்தாய் போற்றி
" செல்வாக் குப்பல பெற்றனை போற்றி
" செழுமையாய் வாழ்ந்த செல்வா போற்றி
" சேகரித் தருள்தனைக் கொடுப்பாய் போற்றி
" சேணம் போலெமைக் காப்பாய் போற்றி
" சேது ஸ்நானம் செய்தோய் போற்றி
" சேமமாய் அருள்தனைச் சேர்த்தோய் போற்றி 770

" சைவ தத்துவம் அறிந்தோய் போற்றி
" சைவப் பண்பருள் சாந்தா போற்றி

" சொக்கத் தங்கமாய் ஆக்குவை போற்றி
" சொத்தெலாம் குருபணிக் காக்கினை போற்றி
" சொப்பனத் திற்காட்சி கண்டனை போற்றி
" சொர்க்க வாழ்வெமக் கருளுவை போற்றி
" சொலற்கரும் பெரும்புகழ் பெற்றனை போற்றி
" சொல்திறத் தால்எமை ஈர்த்தனை போற்றி
" சொன்மாலை சூட்டி மகிழ்வாய் போற்றி

" சோர்வு தவிர்த்தெழு சுடரே போற்றி 780

" சௌபாக் கியம்தந் தாளுவை போற்றி
" சௌரிய மிக்குடை சான்றோய் போற்றி

" ஞாயிறு போலிவண் துலங்கினை போற்றி

ஓம் ஞாலம் போற்றும் ஞானீ போற்றி
" ஞானக் காட்சிகள் கண்டோய் போற்றி
" ஞான சாதனங்கள் தந்தோய் போற்றி
" ஞான வடிவினை அடைந்தனை போற்றி
" ஞான வாழ்வெமக் களித்தனை போற்றி
" தகவுடன் வாழ்ந்த தற்பரா போற்றி
" தடையிலா தருளைப் பெற்றனை போற்றி 790
" தடையிலா தெமையும் ஆள்வாய் போற்றி
" தணலென வாழ்ந்த தகவே போற்றி
" தண்டமிழ்ப் பாடல் பாடுவை போற்றி
" தண்டமிழ்த் தொடைபல சூட்டுவை போற்றி
" தண்ணளி மிக்குடை தந்தாய் போற்றி
" தத்துவம் பற்பல விளக்கினை போற்றி
" தயையால் எங்களை ஆளுவை போற்றி
" தருணம் அறிந்து உதவுவை போற்றி
" தவசிகள் போற்றும் தற்பரா போற்றி
" தவறுகள் பொறுத்தெமை ஆள்வாய் போற்றி 800
" தழல்நிகர் ஞானம் பெற்றோய் போற்றி
" தளர்விலா துழைக்கும் தகவே போற்றி
" தளைகள் பலவும் களைவோய் போற்றி
" தள்ளரும் வினைகளைத் தகர்ப்பாய் போற்றி
" தனக்கென வாழாத் தகைமையே போற்றி
" தனியாட்சி செங்கோல் பெற்றனை போற்றி
" தாச மார்க்கம் கற்பித்தனை போற்றி
" தாமதியா துசெயல் ஆற்றுவை போற்றி
" தாரணி யோர்புகழ் தவனே போற்றி
" தாரா ளமனம் கொண்டோய் போற்றி 810

ஓம் திசைதொறும் குருபுகழ் பரப்பினே போற்றி

" திட ஞானம் பெற்ற தீரா போற்றி
" திட்டமாய்ச் செயல்செய ஊக்குவை போற்றி
" திண்ணிய உள்ளம் கொண்டோய் போற்றி
" தித்திக் கும்கவி தீட்டினே போற்றி
" தியாகம் மிகச்செயத் தூண்டுவை போற்றி
" தியானம் செய்வழி காட்டுவை போற்றி
" திரண்டிடும் அடியரைத் தெருட்டுவை போற்றி
" திரிபுர தகனம் விளக்குவை போற்றி
" திருக்கதவம் திறக்கச் செய்வாய் போற்றி 820

" திருநீற் ருல்துயர் தீர்ப்பாய் போற்றி
" திருநீ றேதுணே என்பாய் போற்றி
" திருவடிப் பாடல் பாடுவை போற்றி
" திருவடி யால்உயர் வெய்தினே போற்றி
" திருவடி தரிசனம் அருள்வாய் போற்றி
" திருவடி நீழலில் அமர்த்துவை போற்றி
" திருவருட் சட்டம் ஓம்பினே போற்றி
" திருவருட் செங்கோல் பெற்றனே போற்றி
" திருவரு ளில்கலந் தொளிர்வாய் போற்றி
" திருவரு ளால்எமை ஆள்வாய் போற்றி 830

" திருவடி தாசப் பெயரோய் போற்றி
" திருப்பல் லாண்டு இசைத்தனே போற்றி
" திரைகள் களேந்தருள் பெற்றனே போற்றி
" திறமை அனேத்தும் உடையாய் போற்றி

" தீட்சை யனேத்தும் விளக்குவை போற்றி
" தீமை அணுவும் இலாதாய் போற்றி
" தீமை காணின் திருத்துவை போற்றி

ஓம் தீயவை எல்லாம் தீய்ப்பாய் போற்றி
" தீராப் பிணிகள் தீர்ப்பாய் போற்றி
" தீர்க்க தரிசனம் உடையோய் போற்றி 840
" தீர்த்தமே மருந்தென் றுரைப்போய் போற்றி
" தீனர்பால் கருணை உடையோய் போற்றி

" துகளிலா நெறிதனைப் பற்றினை போற்றி
" துட்டராம் எமையும் காப்பாய் போற்றி
" துணையாய் இருந்தெமைப் புரப்பாய் போற்றி
" துதிப்பாடல் பாடி மகிழ்ந்தனை போற்றி
" துய்ப்பது குருவருள் என்போய் போற்றி
" துரியா தீதத்தில் திளைப்போய் போற்றி
" துரும்பு நிகர்எமை துலக்குவை போற்றி
" துல்லிய மாய்பொருள் காண்போய் போற்றி 850

" துழாயும் நீறும் தருவாய் போற்றி
" துளக்கமில் உள்ளம் கொண்டனை போற்றி
" துள்ளும் மனத்தை ஒடுக்குவை போற்றி
" துறந்தார் குழுநடு உள்ளாய் போற்றி

" தூக்கம் தவிர்வழி புகலுவை போற்றி
" தூண்டா விளக்கென ஒளிர்வாய் போற்றி
" தூயவர் போற்றும் தூயா போற்றி
" தூரியம் ஒலித்திடச் செய்வாய் போற்றி
" தூலசூக் குமப்பொருள் அறிந்தனை போற்றி

" தெய்வத் தின்குரல் கேட்டனை போற்றி 860

" தெய்வமாய் எங்களுக் கானாய் போற்றி
" தெய்வ வழிகூறி தெருட்டுவை போற்றி
" தெய்வீக உருவுடன் திகழ்வோய் போற்றி

ஓம் தெய்வீகச் சூழலில் இருத்துவை போற்றி
" தெய்வீக ஓவியம் தீட்டுவை போற்றி
" தெவிட்டாத இன்பம் அளிப்பாய் போற்றி
" தெவிட்டாச் செவியுண வருள்வாய் போற்றி
" தெளிவாய்ப் பொருளருள் தேவே போற்றி

" தேடிக் காணொணுத் தேவே போற்றி
" தேவ தேவனைக் கண்டாய் போற்றி 870
" தேவைகள் ஏதும் இலாதாய் போற்றி
" தேனபி டேகம் செய்வாய் போற்றி
" தேனினும் இனிதாய்ப் பாடுவை போற்றி

" தைரிய மாய்ப்பணி ஆற்றுவை போற்றி
" தைரியம் எங்களுக் கூட்டுவை போற்றி

" தொகுத்து நற்புராணம் இயற்றினை போற்றி
" தொகைவகை யோடுரை ஆற்றுவை போற்றி
" தொடர்ந்து நற்கருமம் செய்வாய் போற்றி
" தொடைபல சாத்தி மகிழ்வாய் போற்றி
" தொண்டர்க் கரும்பணி ஆற்றுவை போற்றி 880

" தொண்டு செயற்கெமை ஊக்குவை போற்றி
" தொந்தரை அகற்றும் தூயோய் போற்றி
" தொழுதுயும் நெறியை விளக்குவை போற்றி
" தொன்மை உணர்ந்திடு சுந்தர போற்றி

" தோத்திரம் பற்பல பாடினை போற்றி
" தோத்திரம் செயஎமைத் தூண்டுவை போற்றி
" தோய்ந்து குருபதம் பற்றினை போற்றி
" தோன்ருத் துணைகுரு என்போய் போற்றி

ஓம் தௌர்ப்பாக் கியம்தவிர்த் தாள்வாய் போற்றி
,, நசையிலா வாழ்வு நடத்தினை போற்றி 890

,, நச்சினார்க் கினியன் ஆனாய் போற்றி
,, நஞ்சு மனத்தைத் திருத்துவை போற்றி
,, நடன கணபதியைத் தொழுதனை போற்றி
,, நடுநிலை மாறா நல்லோய் போற்றி
,, நடையினில் ஒழுக்கம் உடையவ போற்றி
,, நம்பும் அன்பரைக் காப்பாய் போற்றி
,, நயமொடும் நல்லுரை அருளுவை போற்றி
,, நரசிம்ம வேளுடன் வாழ்ந்தனை போற்றி
,, நலமெலாம் எமக்கு அருளுவை போற்றி
,, நவிலரு மந்திரம் ஆக்கினை போற்றி 900

,, நற்றவ நாட்டம் நல்குவை போற்றி
,, நாசி நடுத்திகழ் நாட்டம் போற்றி
,, நாடக வாழ்வினை வென்றனை போற்றி
,, நாதன் அருள்என நவிலுவை போற்றி
,, நாதன் திருவடி சூடினை போற்றி
,, நாதஒலி கேட்டு மகிழ்ந்தனை போற்றி
,, நாயடி யனைஆ ளாக்கினை போற்றி
,, நாவடக் கிச்சுகம் பெற்றனை போற்றி

,, நிகழ்ச்சிகள் கண்டுளம் நிறைந்தனை போற்றி
,, நிஷ்டை புரிந்துளம் தெளிந்தனை போற்றி 910

,, நிதர்சன மாயருள் பெற்றனை போற்றி
,, நிதியென குருவடி பற்றினோய் போற்றி
,, நிபுணர் குழுவுள் துலங்குவை போற்றி
,, நியமம் தவறா திருப்போய் போற்றி

ஓம் நிவேதனம் ஆவி என்போய் போற்றி
" நிறையின் பத்தில் நிலைத்தோய் போற்றி

" நீக்கமி லாதுளம் நிறைந்தனை போற்றி
" நீங்கா தெம்மைக் காப்போய் போற்றி
" நீதியே உயிரென வாழ்ந்தோய் போற்றி
" நீரின் தண்மை யானாய் போற்றி 920
" நீள்பவத் தாழா தூக்குவை போற்றி

" நுகர்வரும் இன்பம் அளிப்போய் போற்றி
" நுட்பப் பொருளெலாம் உணர்ந்தோய் போற்றி
" நுண்ணறி வுடைய நுண்மையே போற்றி

" நூதன ஓவியம் படைப்போய் போற்றி
" நூல்பல கற்ற நுண்மையோய் போற்றி

" நெகிழ்வுறு மனத்தினுள் மகிழ்பவ போற்றி
" நெக்குரு கிப்பதம் அடைந்தோய் போற்றி
" நெருங்கி வரும்வினை நீக்குவை போற்றி
" நெற்றியின் நடுஒளி கண்டனை போற்றி 930

" நேம நிட்டை தவறுதோய் போற்றி
" நேயம் வளர்த்திடு நிமலா போற்றி
" நேயம்சான் றோர்பால் வைத்தனை போற்றி
" நேர்த்தியாய் பாடல்கள் பாடுவை போற்றி

" நைட்டிகர் போற்றும் நல்லோய் போற்றி

" நொடியில் நோய்கள் நீக்குவை போற்றி
" நொந்தோர்க் குதவிடும் நோன்மைய போற்றி

" நோற்பவ ருள்திகழ் நுட்பம் போற்றி

ஓம் நௌவி எனப்பொலி ஞானீ போற்றி
" பகலிர வெலாம்பணி ஆற்றுவை போற்றி 940

" பக்குவம் நோக்கி யருளுவை போற்றி
" பக்தி வடிவாய்ப் பொலிவாய் போற்றி
" பக்திப் பாடல்கள் பாடினோய் போற்றி
" படியே றிப்பதம் அடைந்தோய் போற்றி
" பணிவாய் நல்லுரை பகருவை போற்றி
" பணிவுடன் வாழப் பழக்குவை போற்றி
" பணிவே பூண்என அணிந்தோய் போற்றி
" பதிபல சென்றருள் பரப்புவை போற்றி
" பதியாய் குருவை அடைந்தோய் போற்றி
" பந்தமொன் றில்லாப் பகவா போற்றி 950

" பந்த பாசம் நீக்குவை போற்றி
" பந்தம் அடியர்பால் கொண்டனை போற்றி
" பரமா னந்தம் அடைந்தோய் போற்றி
" பரமாத்மா தொடர்பு உடையாய் போற்றி
" பரிபா ஷைகள்நன் றுணர்வாய் போற்றி
" பர்வத வர்த்தனி மணாளா போற்றி
" பழநி யாண்டியருள் பெற்றனை போற்றி
" பலதிற யோகம் பயின்றனை போற்றி
" பள்ளி யெழுச்சி பாடினை போற்றி
" பாசம் விலக்கிடு பவனே போற்றி 960

" பாண்டிய நாட்டில் வாழ்ந்தனை போற்றி
" பாண்டி நாட்டுப்புகழ் பாடினை போற்றி
" பாதகம் யாவும் போக்குவை போற்றி
" பாத கமலம் அருளுவை போற்றி

ஓம் பாதயாத் திரைபல செய்தோய் போற்றி
" பாதுகைப் பாடல் பாடினை போற்றி
" பாரெலாம் குருபுகழ் பரப்பினை போற்றி
" பார்மீ தருள்மழை பொழிவாய் போற்றி
" பாலக விப்பெயர் பண்பே போற்றி
" பாவம் ஏதும்செ யாதோய் போற்றி 970
" பாவம் மன்னித்தெமை யாள்வாய் போற்றி

" பிரணவ நாதம் அறிந்தனை போற்றி
" பிரணவப் பொருளை விளக்குவை போற்றி
" பிரம ஞானம் பெற்றனை போற்றி
" பிள்ளைத் தமிழ்க்கவி இயற்றினை போற்றி

" பீடு நிறைகவி புனைந்தவ போற்றி

" புகழ்மிகப் படைத்த புனிதா போற்றி

" புராணம் எழுதிப் பொலிந்தவா போற்றி

" பூப்போல் மனம்கொள் புங்கவா போற்றி

" பெரியதிற் பெரியநற் பொருளே போற்றி 980

" பேதமை இலாத பெற்றியோய் போற்றி
" பேரின்ப வேட்கை பாடினை போற்றி

" பைநிறை பொருளெனப் படர்ந்தனை போற்றி

" பொறுமை மிகுந்திடு புண்யா போற்றி

" மஞ்சென அருள்மழை பொழிபவா போற்றி
" மணிவிழாக் கண்ட மாண்பே போற்றி
" மறைகளின் உட்பொருள் அறிந்தனை போற்றி

ஓம் மன்னிய செயல்பல செய்தனை போற்றி
,, மாசிலா மணியெனப் பொலிவாய் போற்றி
,, மாமறை யெனக்கவி பாடினை போற்றி 990
,, மாதவம் மிகமிக ஆற்றினை போற்றி
,, மாதொரு பாகனைப் போற்றுவை போற்றி
,, முனைப்படக் கும்வழி அறிந்தனை போற்றி
,, மூவர் அர்ச்சனை மொழிந்தனை போற்றி
,, மெய்யடி யார்களை விரும்புவை போற்றி
,, மேதக்க குணம் உடையவ போற்றி
,, மேன்மைச் செயல்செய ஊக்குவை போற்றி
,, மையல் இலாத மாட்சியே போற்றி
,, மோதகக் கையனை அறிந்தனை போற்றி
,, வகைவகை யாய்ப்பொருள் விளக்குவை போற்றி 1000
,, வத்து தத்துவம் அறிந்தனை போற்றி
,, வருத்த மெலாம்தவிர் தந்தாய் போற்றி
,, வழிநடத் தியெமைக் காப்பாய் போற்றி
,, வாசி யோகம் அறிந்தனை போற்றி
,, வாழ்வின் உயர்நெறி விளம்புவை போற்றி
,, வித்தென விளைவென ஆனாய் போற்றி
,, விநாயகர் நாமாவளி விளம்பினை போற்றி
,, வேங்கடராமப் பெயர் கொண்டனை போற்றி
,, வேதப் பொருளை விளக்குவை போற்றி
,, வைசியர் திலகமாய் வதிந்தனை போற்றி
,, வைராக்யம் ஊட்டும் வண்மையே போற்றி 1011

தவத்திரு பாலகவி சுவாமிகள் ஸஹஸ்ரநாம அர்ச்சனை முற்றிற்று.

ஓம் ஓம் ஓம்

ஓம் ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் துணை

தவத்திரு பாலகவி சுவாமிகள் மீது மன்னூர்பாளையம் விஜயரங்க சுவாமிகள் இயற்றியது

ஆனத்தூர் ஐயா சாமி ஆனத்தூர் ஐயா!
ஆனத்தூரில் அவதரித்தோரே ஆனத்தூர் ஐயா!
அருளொளி பெற்றவரே ஆனத்தூர் ஐயா!
அன்பின் ஒளி அமைத்தவரே ஆனத்தூர் ஐயா!
ஆலயத்துள் அமர்ந்தவரே ஆனத்தூர் ஐயா!
ஆனந்தத்தில் ஆழ்ந்தவரே ஆனத்தூர் ஐயா!
இரெட்டியப் பட்டியைக் காட்டினவரே ஆனத்தூர் ஐயா!
இலங்கு கோயில் கொண்டவரே ஆனத்தூர் ஐயா!
ஈயெனக் கைஏந்தாதோரே ஆனத்தூர் ஐயா!
ஈகையிற் சிறந்தவரே ஆனத்தூர் ஐயா!
உடல்பொருளாவியை அர்ப்பணித்தோரே ஆனத்தூர் ஐயா!
உருக்கமுடன் உரையாற்றுநரே ஆனத்தூர் ஐயா!
ஊக்கமுடன் உழைத்தவரே ஆனத்தூர் ஐயா!
ஊருணி நிறை நீரனையாய் ஆனத்தூர் ஐயா!
என்பும் உருகப் பாடுநரே ஆனத்தூர் ஐயா!
என்றென்றும் அழியாதவரே ஆனத்தூர் ஐயா!
ஏகலைவன் வழி பற்றினோரே ஆனத்தூர் ஐயா!
ஏன்றெனையும் ஆட்கொண்டவரே ஆனத்தூர் ஐயா!
ஐயம் சற்றும் இல்லாதோரே ஆனத்தூர் ஐயா!
ஐம்புலனை வென்றவரே ஆனத்தூர் ஐயா!
ஒப்புடன் உபசரித்தோரே ஆனத்தூர் ஐயா!
ஒற்றுமையாய் வாழ்ந்தவரே ஆனத்தூர் ஐயா!

ஓமெனும் பொருள் விளக்குநரே ஆனத்தூர் ஐயா!
ஓதாது உணர்ந்தவரே ஆனத்தூர் ஐயா!
ஔவிய மில்லாதவரே ஆனத்தூர் ஐயா!
ஔவை போல் வழிகாட்டுநரே ஆனத்தூர் ஐயா!
கணேசருடன் கலந்தவரே ஆனத்தூர் ஐயா!
ஙப்போலெமைச் சேர்த்தருள்வீர் ஆனத்தூர் ஐயா!
சனன மரண மற்றவரே ஆனத்தூர் ஐயா!
ஞயம்பட உரைத்தவரே ஆனத்தூர் ஐயா!
டம்பம் சற்று மில்லாதவரே ஆனத்தூர் ஐயா!
ணகரம் போல் எமை வளைத்தவரே ஆனத்தூர் ஐயா!
தன்னடக்கம் மிக்கவரே ஆனத்தூர் ஐயா!
நம்பினோர்க்கு நாயகரே ஆனத்தூர் ஐயா!
படிப்படியாய் ஏறினோரே ஆனத்தூர் ஐயா!
மன்னர் போற்றும் பாலகவியே ஆனத்தூர் ஐயா!
யமபம மற்றவரே ஆனத்தூர் ஐயா!
ரம்பம் போல் வினையை அறுத்தவரே ஆனத்தூர் ஐயா!
லலாடத்தி லொளியைப் பெற்றவரே ஆனத்தூர் ஐயா!
வள்ளலென வழங்கினோரே ஆனத்தூர் ஐயா!
வேங்கடராமன் பெயர் பூண்டவரே ஆனத்தூர் ஐயா!
அழகனை அணைந்தவரே ஆனத்தூர் ஐயா!
ளத்துடன் கூசேர்த்தாண்டவரே ஆனத்தூர் ஐயா!
அறத்தினை நிலை நாட்டினோரே ஆனத்தூர் ஐயா!
அனந்தமுமாய் ஆனவரே ஆனத்தூர் ஐயா!
அன்னதானம் ஆற்றினோரே ஆனத்தூர் ஐயா!
ஆனத்தூர் ஐயா சாமி ஆனத்தூர் ஐயா!
ஆனத்தூரில் அவதரித்தோரே ஆனத்தூர் ஐயா!

ஓம் ஸ்ரீ இரெட்டியப்பட்டி சுவாமிகள் துணை

அருட்குரு நாதனை அனுதினம் போற்று.

ஆரணப் பொருளென அகத்துட் கொள்ளு.

இகபர சுகத்தை இனிதே தள்ளு.

ஈதல் உயிரென என்றும் போற்று.

உயிர்களை இறையென் உளத்துள் கொள்ளு.

ஊன்பொதி உடலை நிலையெனக் கொள்ளேல்.

என்றும் இறையடிக் கேங்கி நின்றுவாழ்.

ஏத்திநின் றென்றும் இணையடி தொழுதுய்.

ஐயம் சற்றும் அகத்தில் கொள்ளேல்.

ஒன்றே இறையென உலகிடைக் காண்க.

ஓதுவது ஐயன் புகழென அறிக.

ஔவியம் சூது அனைத்தும் அகற்று.

அஃகம் பலவும் அவன் எனஅறி.

தவத்திரு பாலகவி சுவாமிகள் இயற்றிய நூல்கள்

1 குருபர வணக்கம்
2 சற்குருநாதர் திருவடிப் புகழ்ச்சி
3 சற்குரு நாமாவளி
4 மதுரைப் பரிபூர்ணர் திருப்பாவை, திருப்பள்ளியெழுச்சி
5 இரெட்டியப்பட்டி சற்குருநாதர் அர்ச்சனை
6 திருக்கோயில் திருப்பணி முறையீடு
7 குருநாதர் பிள்ளைத்தமிழ்
8 குரு அருள்வேட்டல்
9 குரு அருள் திருஉந்தியார்
10 அருட்பிரசாதம்
11 அருள் மணிப்பெட்டகம்
12 அன்பின் ஒளி
13 அருள் நெறி மாலை
14 அருட்சட்ட வழிபாட்டு முறை
15 அருட் சக்தி அன்னை வரலாறு
16 கருணைமிகு வள்ளல் அருள் நிறைசரிதம்
17 சமயப் பொது நெறி கண்டசற்குருநாதர்
18 மூவர் அர்ச்சனைக் கொத்து
29 அன்பு வழிகாட்டும் அருள் உபதேசங்கள்
20 அன்பு நெறியும் அருள் நெறியும்